1970 மார்ச் 4]

அரசியல் காரணங்களுக்காக மத்திய அரசு தயக்கம் காட்டுகிறதா? அப்படித் தயக்கம் காட்டினல் இந்த அரசு அதை எடுத்தே ஆக வேண்டும் என்பதை வற்புறுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி: அவர்கள் எந்தக் காரணங்களைக்கொண்டு தயக்கம் காட்டினலும் நாம் கவலைப்படப்போவதில்லை. நம்முடைய உரிமையை நாம் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்திக்கொண்டே இருப்போம்.

ஏற்றுமதிப் பொருள்களை அதிகரிக்க திட்ட வாரியம்.

* 202. **வின.—திரு. எஸ். அக்னிராஜு:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்றுமதிப் பொருளை அதிகரிப்பதற்காகத் திட்டவாரியம் (Planning Board) அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையிலிருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் விபரமென்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினவிற்கு இடமில்லை.

திரு. எஸ். அக்னிராஜு: தலைவர் அவர்களே, நமது தமிழ் நாட்டில் ஏற்றுமதி செய்கின்ற பொருள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் இருக்கிற தொடர்பு முறைகள் சரியாக இல்லாததே காரணம். ஆகவே இதை நல்லமுறையில் சீர்படுத்த இத்தகைய ஒரு போர்டு அமைப்பது பற்றி அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதுபற்றி கவனிக்க—ஸ்டேட் எக்ஸ்போர்ட் ப்ரமோஷன் அட்வைசரி போர்டு ஒன்று ஏற்கனவே முதல் அமைச்சர் தலைமையில் இயங்கி வருகிறது.

திரு. பி. வேலுசாமி: புதியதாக டிசைன்களைப் புகுத்தி—ஏற்றுமதி உறுதியாக—அதிகமாக இருக்க அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கைத்தறியைப் பொறுத்தவரையில் பயிற்சி நிலையங்கள் வைத்திருக்கிறேம். வெளிநாடுகளில் தேவைப்படுகிற டிசைன்களை அறிந்து அந்த டிசைன் பயிற்சியை இவர்களுக்கு அளித்து—உற்பத்தியாகிறவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ஆர். கருப்பையா: தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் இருந்து கரும்பு, சர்க்கரை எற்றுமதி வெகுவாகக் குறைந்துவிட்டது. அதனல் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறர்கள். ஜாவா போன்ற இடங்களில் உள்ளவர்கள்

நம்மிடம் இருந்து வெல்லம், சர்க்கரை வாங்கிக்கொள்ளத் தயாராக இருப்பதனால் இவற்றை ஏற்றுமதி செய்ய மத்திய சர்க்காரிடம் இருந்து அனுமதியைப் பெறுவார்களா ?

(விடை இல்லை)

கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகள் நியமனம்.

* 203. வினா.—திரு. என். எஸ். வி சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விவரமான விடை * சட்டப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகள் எந்த அரசியல் கட்சியையும் சேராதவர்களாகப் பார்த்து நியமிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த ஆட்சி பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு அப்படிப்பட்ட உத்தரவுதான் போடப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். நாகசுந்தரம் : கௌரவ நீதிபதிகளுக்குக் கூடுதலான அதிகாரம் தந்து மதுவிலக்கு போன்ற வழக்குகளை எல்லாம் அவர்களிடம் ஒப்படைக்க அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாடு முழுவதும் கிராம நீதி மன்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டுமென்ற கொள்கை 1950 பஞ்சாயத்துச் சட்டத்தில் இருந்தது. 1958 சட்டத்தில் அது எடுக்கப்பட்டிருக்கிறது. பழைய வில்லேஜ் கோர்ட் ஆக்ட் இருக்கிறது. இப்போது கிராம நீதி மன்றங்கள் பணியாற்றவில்லை. ஆகவே இதற்கு கௌரவ நீதிபதிகளை நியமித்து தனிச் சட்டமே செய்யலாமா என்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

நீர்ப்பாசனத்துறையிலிருந்து காணமற்போன நிலப் படங்கள்

* 204. வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீர்ப்பாசனத் தலைமை அலுவலகத்திலிருந்த Restricted Maps காணாமல் போனது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

101-ம் பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.